**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**DEPOSITION OF WITNESS**

***(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)***

**CC.No. 152/2025** **DATE: 06.11.2025**

**அ.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரஞ்சித்குமார் | Father's Name | : | பழனிசாமி |
| District | : | சேலம் | Taluk | : | |
| Village | : | | Calling | : | |
| Religion | : | இந்து | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2025.

**(எதிரிகள் 1 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்.)**

**முதல் விசாரணை :**

1. நான் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், நடுவனேரி கிராமம், புத்தூர் பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். ஈரோட்டில் டெய்லர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த இரு வருடங்களுக்கு முன்பாக என் வீட்டிற்கு முன்பாக சுமார் 20,,30 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அது இரவு நேரம் என்பதால் அவர்கள் யார் என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து அந்த கூட்டத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது அதில் நான் கீழே விழுந்து எனது கை மற்றும் இடுப்பில் அடிபட்டு காயம் ஏற்பட்டது.

2. சந்தேகத்தின் அடிப்படையில் நான் எதிரிகள் மீது மகுடஞ்சாவடி காவல் நிலைய அதிகாரியிடம் அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 08.01.2022ம் தேதி இரவவு 11.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் தங்கள் வீட்டின் கதவை உடைத்து அத்து மீறி உள்ளே நுழைந்தும், ஆபாச வார்த்தைகளால் திட்டியும், கையால் அடித்தும்,. கத்தியால் காயத்தை ஏற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்ததாக புகாரிலும், போலிஸார் வாக்குமூலத்திலும், சொல்லியுள்ளீர்கள் என்றால் இல்லை. இந்த வழக்கின் எதிரிகள் என்னைத் தாக்கினார்களா என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்சொன்ன சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நானும் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம் என்று சொன்னால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கபட்டது.

**மறுவிசாரணை:–** இல்லை.

Witness-Sd/- Ranjithkumar,

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.